கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்
வடக்கு - கிழக்கு மாகாணம்
සමුපකාර සංවර්ධන දෙපාර්තමේන්තුව
උතුරු - නැගෙනහිර පළාත
DEPARTMENT OF CO-OPERATIVE DEVELOPMENT
NORTH - EAST PROVINCE

எனது இல. / මගේ අංකය / My No. } என்ஈபி/சிஒ/பொது-2
உமது இல. / ඔබේ අංකය / Your No. }

உட்துறைமுக வீதி,
ඇතුල් වරාය පාර,
Inner Harbour Road,

திருகோணமலை.
ත්‍රිකුණාමලය.
Trincomalee, Sri Lanka.

22.04.2002

**சுற்றுநிருபம் இல 02/02**

சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும்.

**கூட்டுறவுப் பணியாளர்களது சேவையை 60 வயதுக்கு மேலும் நீடித்தல்**

கூட்டுறவுச் சங்கங்களில் பல தரப்பட்ட பதவிகளில் இருக்கும் பணியாளர்களும் 60 வயதுக்கு மேல் ஒன்றுக்கு மேற்பட்ட வருடங்களாக கடமை புரிந்துள்ளமையையும், கடமை புரிவதையும் அறிய முடிகிறது.

கூட்டுறவுஊழியர் ஆணைக்குழு பிரமாணங்களின்படி கூட்டுறவுப்பணியாளர் ஒருவர் ஓய்வுபெற வேண்டிய வயது 60 ஆகும். விதிவிலக்காக உயர் முகாமைத்துவ பதவி, அல்லது தொழில்நுட்ப பதவி ஒன்றுக்கு ஆட்சேர்ப்பின்போது பொருத்தமானவர்களை தெரிவு செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் அதற்கான காரணங்களை தகுந்த ஆதாரங்களுடன் நிறுவி 60வயதிற்கு மேற்பட்ட ஒரு பணியாளரை கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்று குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிக்கு சேவையில் வைத்திருக்க முடியும்.

சங்கங்களின் இயக்குனர்சபை பின்வரும் அறிவுறுத்தல்களை நிச்சயமாக கடைப்பிடிக்க வேண்டும்.

01. ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திலும் ஒவ்வொரு பணியாளருக்குமாக சுயவிபரக் கோவைகள் பேணப்படுகின்றன. அதில் உள்ள விபரங்களுக்கமைவாக அவரது நியமனம், வினைத்திறன், பதவிஉயர்வு, இளைப்பாறல் என்பன போன்ற விபரங்கள் அறியக்கூடியதாக இருக்கும். எனவே ஒரு ஊழியர் இளைப்பாறுவதற்கு குறைந்தது 06 மாதங்களுக்கு முன்னராவது அவருக்கு இளைப்பாறல் பற்றிய முன்னறிவித்தல் செய்வதுடன், அப்பதவிக்கு தகுதியான ஒருவரை நியமிப்பதற்கு கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு விதிகளின்படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

02. புதிய பணியாளரை தெரிவு செய்வதற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும் பொருத்தமானவரை தெரிவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்பதனை ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03. இயக்குனர்சபை 60 வயதிற்குமேல் தாம் நினைத்தவாறு சந்தர்ப்பத்திற்கு ஏற்றவகையில் தீர்மானங்களை எடுத்து தொடர்ந்து வேலை வழங்க முடியாது.

04. 60 வயதிற்கு மேற்பட்ட பணியாளர் தனது ஊழியர் சேமலாபநிதி, பணிக்கொடை, என்பவற்றைப் பெற்ற பின்பும் தொடர்ந்து வேலைக்கமர்த்துவதனால் எதுவித ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்க முடியாமல் போகலாம்.

அலுவலகம் / කාර්යාලය / Gen. office : 026 - 22189.
ஆணையாளர் / කොමසාරිස් / CCD & RCS : 026 - 21019.
சங்கங்கள் பிரிவு / සමිති අංශය / Societies Section : 026 - 22749, 026 - 20857
தொலை நகலி / ෆැක්ස් / Fax : 026 - 20856.

ஆகவே எதிர்காலத்தில் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்தி விண்ணப்பங்களை சிபார்சு செய்து கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கும்படி அறியத்தருகின்றேன்.

01. தொழில்நுட்பம், உயர் முகாமைத்துவம் போன்ற பதவிகள் விடயத்திலேயே அதுவும் போதிய விளம்பரம் செய்தும் பொருத்தமானவரை தெரிவு செய்ய முடியாமல் போனதை உறுதிப்படுத்தப்படும் போது மட்டுமே சேவைநீடிப்புக்கு சிபார்சு செய்தல்

02. சேவைநீடிப்புக்கு உரிய அனுமதி கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் பணியாளர்கள் விடயத்தில் சேவைநீடிப்பு காலம் முடியும்வரை தொடர்ந்தும் அவரை பணியாளராகவே கருதி, பிணை, பிணைவட்டி, சேமலாபநிதி, வாழ்க்கைத்தள்ளுபடி, பணிக்கொடை போன்றவற்றை சேவைநீடிப்புக்காலம் வரை வழங்காது இருத்தலை உறுதிப்படுத்தல்.

03. சேவைநீடிப்புக் காலத்துள்ளும் ஊழியர்சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கைநிதி, வாழ்க்கைத்தள்ளுபடி போன்றவற்றுக்கு பணியாளரிடமிருந்து உரிய பங்களிப்பை பெறுவதோடு இதற்கான சங்கத்தின் உதவுதொகையினை சங்கம் வழங்குதலையும் உறுதிப்படுத்திக்கொள்ளல்.

04. ஆகக்கூடுதலாக ஒரு ஆண்டு சேவைநீடிப்புக்கு மட்டுமே ஒருமுறை சிபார்சு செய்யலாம்.

இவ்வாறு கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் முன்னனுமதி பெறப்படாமல் 60 வயதுக்கு மேல் மீள் நியமனம் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் அனைத்தும் அனுமதிக்கப்படாத கொடுப்பனவாகக் கருதப்படுவதுடன் அக்கொடுப்பனவுகளை வழங்குமாறு தீர்மானித்தவர்கள், வழங்குவதற்கு அனுமதி வழங்கியவர்கள் ஆகியவர்களிடமிருந்து வருமதியாகக் காட்டப்படுவதற்கு, கணக்காய்வாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கி, நடவடிக்கை எடுக்கும்படியும் கேட்டுக்கொள்கின்றேன். இவ்விடயங்களை சகல கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தெரியப்படுத்த நடவடிக்கை எடுப்பதுடன், இவ்வாறான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருப்பின் அது தொடர்பாக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தரிடமிருந்து அறிக்கை கோரிப்பெற்று எனக்கும் தெரியப்படுத்தவும்.

**ஆ.சுப்பிரமணியசர்மா,**
**கூ.அ.ஆணையாளரும்,**
**கூ.ச.பதிவாளரும்(வகி).**

பிரதி:
செயலாளர்,
பொது நிர்வாக, உள்ளூராட்சி, கூட்டுறவு அமைச்சு,
வடக்கு கிழக்கு மாகாணம்.

செயலாளர்,
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு,
வடக்கு கிழக்கு மாகாணம்.

அதிபர்,
கூட்டுறவுப்பயிற்சி நிறுவனம்,
வவுனியா.